**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ.,எம்.எல்.,**

**தலைமை தாங்கும் அலுவலர்,**

**தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்.**

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.3/2025**

In

**<u>I.D.No. 310 /2019</u>**

பொதுச்செயலாளர்,
பெர்ஃபெட்டி வான்மேலா தொழிலாளர் மையம்,
எண்.18.51 EWS,NH-1 பரிமேலழகர் தெரு,
மறைமலைநகல்,
காஞ்சீபுரம் மாவட்டம் - 603 303. ... மனுதாரர்/மனுதாரர்

/எதிராக/

நிர்வாகம்,
பெர்ஃபெட்டி வான்மேலா இந்தியா
பிரைவேட் லிமிடெட்,
எண்.7, காரணைப்புதுச்சேரி கிராமம் மற்றும் அஞ்சல்,
ஊரப்பாக்கம்,
காஞ்சீபுரம் மாவட்டம் - 603 210 ... எதிர்னுதாரர்/எதிர்மனுதாரர்.

இந்த மனு இறுதி விசாரணைக்காக கடந்த 05.01.2026 அன்று வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். J.பிரதாபன், S.ருத்ரநாத் மற்றும் N.பொன்னுரங்கம் ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். M.கந்தசாமி மற்றும் P.அசோக்குமார் ஆகியோர் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

1. தொ.த.எண்.310.2019 வழக்கில் தொழிலாளர் தரப்பு சாட்சியத்தை 03.09.2025 அன்று முடித்துவைத்து உத்தரவிட்டதை ரத்து செய்து, மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (Reopen) செய்து சாட்சியமளிக்கவும், ஆவணங்களை தாக்கல் செய்யவும் அனுமதிக்க தொழிற்தகராறு சட்டப்பிரிவு 11(3) மற்றும் விதி 39ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர்/மனுதாரர் சார்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :-</u>**

இவ்வழக்கில் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் R.மரிய ஆரோக்கிய பிராங்கிலின் என்பவரை பணியிலிருந்து நிர்வாகம் நீக்கியதை எதிர்த்து மனுதாரர் தொழிற்சங்கத்தின் சார்பில் தொடரப்பட்ட தொழிற்தகராறுவில் அரசு அரசாணை(டி) எண்.702, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 02.12.2019 எழுவினாவை எழுப்பி இந்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக பரிந்துரைத்துள்ளது.

இவ்வழக்கில் முதல்நிலை எழுவினா எழுப்பப்பட்டு உள்துறை விசாரணை இயற்கை நீதிக்கு உட்பட்டு நடத்தப்பட்டதாக தீர்வு

காணப்பட்டுள்ளது. இதர எழுவினாக்களுக்கான சாட்சியம் அளிக்க இருதரப்புக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் சாட்சியமளிக்க 03.09.2025 அன்று இறுதிவாய்ப்பு அளிக்கப்பட்டது. அன்றைய தினம் தாவா தொழிலாளியின் உறவினர் ஒருவர் இறந்துவிட்ட காரணத்தால் அவரால் விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை. அதனால் அன்றைய தினமே மனுதாரர் தரப்பு சாட்சி முடித்துவைக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பிலும் சாட்சியம் வழங்காததால் முடித்துவைக்கப்பட்டு இறுதி வாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நிர்வாகத்தின் பழிவாங்கல் நடவடிக்கையின் காரணமாகத்தான் தாவா தொழிலாளி பணியிலிருந்து நீக்ககப்பட்டுள்ளார் என்பதை நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் கடமையாகும். அது தொடர்பான ஆவணங்களையும் சாட்சிங்களையும் தாக்கல் செய்ய உள்ளதால் வழக்கு 03.09.2025 அன்று முடித்துவைத்ததை ரத்து செய்து மீள்திறப்பு (Reopen) செய்து சாட்சியமளிக்கவும், ஆவணங்களை தாக்கல் செய்யவும் அனுமதிக்க வேண்டுமென்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரர் வழக்கை மீண்டும் மீள்திறப்பு செய்ய வேண்டும்மென்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகள் மற்றும் குற்றச்சாட்டுகளையும் எதிர்மனுதாரர் மறுக்கிறார்.

24.09.2024 தேதியிட்ட உத்தரவின்படி உள்துறை விசாரணை நியாயமானதாகவும், முறையாகவும் நடத்தப்பட்டதாக இந்நீதிமன்றம் உத்தரவிட்டதிலிருந்து மனுதாரர்/மனுதாரர் சாட்சியமளிக்க போதுமான வாய்ப்பை வழங்கியும் சாட்சியமளிக்க தவறிவிட்டார். மனுதாரரின் சாட்சியமளிக்கக்கூடிய வாய்ப்பை 03.09.2025 அன்று முடித்து வைத்தை மீள்திறக்க 11.11.2025 அன்று தாமதமாக மனு தாக்கல் செய்தார். மனுதாரர் இந்த வழக்கை நீடிக்க மட்டுமே இம்மனு தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேலே கூறப்பட்ட காரணங்களுக்காகவும் மனு நிலைக்கத்தக்கதல்ல மற்றும் தகுதியற்றது என்று தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (**Reopen**) செய்து சாட்சியமளிக்கவும், ஆவணங்களை தாக்கல் செய்ய இம்மனு அனுமதிக்கக்கூடியதா ?

5. அரசால் பரிந்துரைக்கப்பட்ட இவ்வழக்கில் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் R.மரிய ஆரோக்கிய பிராங்கிலின் என்பவரை பணியிலிருந்து நிர்வாகம் நீக்கியதை ரத்து செய்து அவருக்கு மீண்டும் பணியும், பின்சம்பளம் மற்றும் பணப்பலன்களை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை தொழிற்சங்கத்தின் சார்பில் எழுப்பப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் தொழிற்சங்க உறுப்பினர் R.மரிய ஆரோக்கிய பிராங்கிலின் என்பவரின் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணையானது இயற்கைநீதிகளுக்கு உட்பட்டும், முறையாகவும் நடத்தப்பட்டதாக 24.09.2024 அன்று முதல்நிலை விசாரணைக்கான தீர்வம் காணப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 11Aன் கீழ் வழக்கை விசாரணை செய்ய மனுதாரர் தொழிற்சங்கத்திற்கு சாட்சியம் அளிக்க அழைக்கப்பட்டது. ஆனால்

சாட்சியமளிக்க மனுதாரர் தரப்பில் 03.09.2025 தேதி வரை ஆஜராகவில்லை. ஒரு வருட கால அவகாசம் அளித்தும் மனுதாரர் தரப்பில் சாட்சியத்தை அளிக்க வராததால் 03.09.2025 அன்றைய தினம் மனுதாரர் சாட்சியமளிப்பதை முடித்துவைக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் அளிப்பதற்காக அழைக்கப்பட்ட போதும் எதிர்மனுதாரர் தரப்பிலும் சாட்சியம் அளிக்க முன் வராத காரணத்தினால் 08.10.2025 தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இரு தரப்பினரையும் வாதுரைக்காக அழைக்கப்பட்டது. வாதுரைக்காக சுமார் 4 வாய்தாக்கள் போடப்பட்ட போதும் இருதரப்பிலும் வாதுரைக்காக ஆஜராகாத நிலையில் மனுதாரர் தொழிற்சங்கத்தின் சார்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் மனுதாரர் சாட்சியம் அளிப்பதற்காக போதிய கால அவகாசம் அளித்தும் அதை பயன்படுத்திக்கொண்டு வழக்கை நிரூபித்துக்கொள்ள தேவையான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு காலதாமதாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே

இந்நீதிமன்றம் மேலும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கலாம் என்று கருதி நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது.

7. ஆகவே இவ்வழக்கு அடுத்த வாய்தா வரும் அன்றே மனுதாரர் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும், செங்கல்பட்டு, DLSA க்கு ரூ.2000/- யை 21.01.2026 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.01.08 17:58:36 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,

தொழிலாளர் நீதிமன்றம்,

காஞ்சீபுரம்.